[19th August 1960

குளிப்பதற்கும், உடுத்துவதற்கும் முன்வந்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர்களில் சில பேர்களைப் பார்த்தால், அவர்கள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லமுடியாமல் ஆச்சரியப்படும் வகையில் இருக்கிறார்கள்.

SRI S. RANGANATHA MUDALIYAR : Do the Government know that so far as these Narikoravars are concerned their nomadic spirit is so great that they refuse to be settled and therefore some coercive measures have to be adopted by the Government to settle them at one place to prevent wastage of manpower?

THE HON. SRI P. KAKKAN : That is why we have asked them to settle in one place and take advantage of the facilities offered by the Government.

State Labour Advisory Board

*** 313 *Q.*—SRI S. M. ANNAMALAI :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 12, 13—2—1960 தேதிகளில் நடந்த மாநில தொழிலாளர் ஆலோசனை போர்டின் (State Labour Advisory Board) கூட்டத்தில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?

(ஆ) அவைகளில் அமுலாக்கப்பட்டவை எவை?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[a] furnishing the information is placed on the table of the House.

Bridge across Bhavani river

*** 314 *Q.*—SRI P. G. MANICKAM :** கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்ற கோயம்புத்தூர் ஜில்லா கோபிச்செட்டிப்பாளையம் தாலூகா பெருந்தலையூர் கிராமத்தில் பவானி ஆற்றின்மீது பாலம் கட்டும் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) இப்பாலம் கட்டுவதற்காக கணக்கிடப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (அ) & (ஆ) The detailed estimate and plans are under final scrutiny. The final cost of the work will be worked out and the work taken up for execution after technical sanction is accorded.

North Arcot District Co-operative Central Bank

*** 315 *Q.*—SRI S. M. ANNAMALAI :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கில் இதுவரை பணம் தள்ளுபடி (write off) செய்யப்பட்டுள்ளதா?

---

[a] Printed as Appendix III on pages 108-109, infra.

19th August 1960]

(ஆ) அப்படியானால், எவ்வளவு பணம் என்ன காரணத்திற்காக?

(இ) 1960-ல் எவ்வளவு பணம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(ஆ) & (இ) During 1959–60, a total sum of Rs. 4,402.57 (Rupees four thousand, four hundred and two and naye Paise fifty-seven only) due from three liquidated co-operative societies was written-off by the District Co-operative Central Bank, Vellore, as these societies had no realisable assets. During the current year, one proposal for the write-off of a sum of Rs. 3,299.98 (Rupees three thousand two hundred and ninety-nine and naya Paise ninety-eight only) due from Achamangalam Co-operative Society (liquidated) was received. This amount was also written off by the bank.

S.S.L.C. Examination

* 315-(அ) Q.—**SRI P. G. MANICKAM :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் மாறுதல் செய்வது சம்பந்தமாக அரசாங்கத்தாரால் பரிசிலனை ஏதாவது நடத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) அவ்வாறு பரிசிலனை நடத்தப்பட்டுவரின் விவரங்கள் யாவை?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & (ஆ) The question of reform of examinations in general is being considered by the Government of India and organisations under them in consultation with the State Governments. This Government are co-operating in the Seminars and Conferences held on this subject. Concrete proposals in regard to the reform of the present system of examination have not so far emerged.

SRI K. ANBAZHAGAN : இந்தக் கேள்வியில், 'எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு நடத்துவதிலே ஏதேனும் மாற்றம் இருக்குமா' என்பது அடிப்படைக் கேள்வியாக அமைந்திருக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு நடத்தி, அதற்குப் பிறகு, ஹையர் செகண்டரிக்கு மற்றொரு தேர்வு நடத்தும் நிலைமை ஏற்படுமா? அப்படியானால், ஓராண்டுக்கு இரண்டு தேர்வுகள் எழுதவேண்டிய நிலைமை மாணவர்களுக்கு ஏற்படுமல்லவா?

THE HON. SRI C. SUBRAMANIAM : பொதுவாக பரீட்சை முறையை மாற்றியமைக்க ஏதாவது பரிசீலனையில் இருக்கிறதா என்று கேட்டிருக்கும் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். பத்தாவது வகுப்பு தீர்ந்ததற்குப் பிறகு ஒரு பரீட்சையும், 11-வது வகுப்பு தீர்ந்ததற்குப் பிறகு ஒரு பரீட்சையும் நடத்துவதா என்ற பிரச்னை தனியாக விவாதிக்கப்பட வேண்டியது.